**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-6692

Volume: 9

Issue: 1

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.07.2024

Accepted: 20.09.2024

Published: 01.10.2024

Citation:
Vaman, N. "The Revival of Saivism in Batticaloa during the Period of British Rule." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 2, 2024, pp. 33–44.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.6692

*Corresponding Author:
sankariphd86@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Murugan Worship and Kuthu in Sangam Literature

**M. Sankareswari**
*Assistant Professor*
*G.Venkataswamy Naidu College (Autonomous)*
*Kovilpatti, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-8154-5074*

**Abstract**
*Religion is an integral part of people's lives from ancient times to the present day. It is impossible to separate religion from them. People believed that every action and event happened because of religion. From the common people to the king who ruled the country, this faith was ingrained. It is called faith in God. Where both love and valor are manifested, sometimes their faith in God is manifested. Murugan, the god of Tamils, was worshiped in five types of lands in ancient times, considering it as the land deity. Murugan, who was greatly worshiped by thepeople of Kurinji nila, is today worshiped as a great deity and a Tamil god all over the world. Let us examine that the processions, chants and rituals performed to Murugan during the Sangam period are being performed today.*

***Keywords:*** *Murugu, Velan, Malar, Seyon, Se, Sangam Literature*

**References**

1. Alegesan, S., Thoolkappiyam, Sudha pathipagam, thoothukudi, First Edition, 2008
2. Alis, A. (Uraiyaciriyar). Pathittrupatthu. New Century Book House(P)Lit, Chennai, First Edition, 2007.
3. Sanmugampillai, M., nigandu soorpoorul Kovai, Madurai kamarajar university, Madurai, First Edition, 1982.
4. Samy, P.L., Sanga Noolkalil Murugan, Sekar Pathipagam, Chennai, First Edition.
5. Subramaniyan, P. (Uraiyaciriyar). Paripadal. New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2007.
6. Jeyabal, R. (Uraiyaciriyar). Agananuru (Part -1). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2007.
7. JeyaBal, R. (Uraiyaciriyar). Agananuru (Part -2). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
8. Thachanamoorthi, A. (Uraiyaciriyar). Ikurunuru(Part -1). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
9. Nagarajan, V. (Uraiyaciriyar). Kurunthogai(Part -1). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
10. Nagarajan, V. (Uraiyaciriyar). Kurunthogai(Part -2). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
11. Balasubramaniyan,G.V. (Uraiyaciriyar). Nattrinai. New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
12. Balasubramaniyan,G.V. (Uraiyaciriyar). Purananuru(Part -1). New Century Book House (P)Lit, Chennai, First Edition, 2004.

13. Manivasagam, k. Murugan thonmam - nerininrar nidu vazvar- samayaneri, International Research Journal of Tamil, Vol - 3, Issue - 2, 2021.
14. Mohan, R. (Uraiyaciriyar). Patthupattu (Part -1). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
15. Mohan,R. (Uraiyaciriyar). Patthupattu (Part -2). New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
16. Viswanathan,A. (Uraiyaciriyar). Kalitthogai. New Century Book House (P) Lit, Chennai, First Edition, 2004.
17. K. Ramu, 'Sangam' puthinathil koolivazhal makkalin vazhviyal, Shanlax International journal of Tamil Research, Vol- 6 Issue - 1, 2021

# சங்க இலக்கியத்தில் முருகனுக்கு நடத்தும் வழிபாடும் கூத்து முறையும்

***முனைவர் மா. சங்கரேஸ்வரி***
உதவிப்பேராசிரியர்
கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி (தன்னாட்சி), கோவில்பட்டி

***ஆய்வுச்சுருக்கம்***
*சமயம் என்பது பண்டைக்காலம் தொட்டு தற்காலம் வரை மக்களுடைய வாழ்க்கையில் ஒன்றிணைந்து வருகின்றது சமயத்தை பிரித்துணர்ந்து பார்ப்பது இயலாத செயலாக இருக்கின்றது. ஒவ்வொரு செயலும் நிகழ்வும் சமயம் சார்ந்து நிகழ்கின்றது என்று மக்கள் நம்பினர். மக்கள் முதல் நாட்டையாளும் மன்னன் வரை இந்நம்பிக்கை இழையோடி இருந்தது. காதல், வீரம் இரண்டும் வெளிப்படும் இடங்களில் ஒருசில நேரங்களில் தெய்வத்தின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை வெளிப்படுகின்றது. தமிழுக்குக் கடவுளான சேயோனை பண்டைக்காலத்தில் ஐவகை நிலங்களில் குறிஞ்சி நிலத்தெய்வமாகக் கருதி வழிபடத்தொடங்கினர். குறிஞ்சிநில மக்கள் பெரிதும் வழிபட்ட சேயோனை (முருகனை) இன்று பெருந்தெய்வமாகவும் தமிழ்க்கடவுளாகவும் உலகமெங்கும் வழிபடுகின்றனர். சங்க காலத்தில் முருகனுக்கு நடத்திய வழிபாடுகளும் கூத்துகளும் சடங்குகளும் அதிகமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *முருகு, வேலன், மலர், சேயோன், சங்க இலக்கியம்*

## முன்னுரை

மக்களின் நம்பிக்கைகளுள் ஒன்று தெய்வ நம்பிக்கையாகும். சமயம் சார்ந்து தெய்வங்கள் பல இருந்தாலும் ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரை சில தெய்வங்களை வழிவழியாக வழிபட்டு வருகின்றனர் மக்கள். அத்தெய்வங்களுள் ஒன்றான தெய்வம் வேலன். இவனைத் தமிழ்க்கடவுள் என்று கூறுவர். தமிழுக்கு மட்டுமின்றி தமிழர்களுக்கும் ஆதியான இறைவனாவான். சங்க இலக்கியத்தில் வேலனைப் (முருகனை) பற்றிய குறிப்புகள் மிகுதியாகவே உள்ளன.

## முருகன்

சங்க இலக்கியங்கள் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நில அடிப்படையில் பகுத்து மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கின்றன. இந்நிலங்கள் ஒவ்வொன்றுக்கும் தொழில் அடிப்படையில் ஒவ்வொரு தெய்வம் உண்டு. குறிஞ்சி மலையும் மலை சார்ந்த பகுதியாகும். குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாகும். அவ்வகையில் குறிஞ்சிக்குத் தெய்வமாக சேயோன் கருதப்பட்டான். சேயோன் என்பது சிவந்த நிறமுடைய முருகனைக் குறிக்கின்றது. இதனை, சேயோன் மேய மைவரை உலகமும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியமும் முருகனை குறிஞ்சி நிலத்திற்குரியவன் என்று குறிப்பிடுவதை,

**பிண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ**
**(திருமுருகாற்றுப்படை,பா.267)**
**தெறல் அரு மரபின் கடவுட் பேணி**
**(அகநானூறு,பா.13:3)**

என்ற அடிகள் மூலம் அறிய முடிகிறது.

## முருகனுக்கு வழங்கும் வேறுபெயர்கள்

சங்க காலத்தில் முருகனுக்குப் பல்வேறு பெயர்கள் இருந்ததாகச் சங்க இலக்கியம் பகர்கின்றது. முருகனுக்குத் திவாகரம் *26* பெயர்களைத் தர நாமதீப நிகண்டு *64* பெயர்களைத் தருகிறது. இப்பெயர்களுள் பல ஒருபொருளில் வரும் வேறுவேறு பெயர்களாக

என்பதும் நோக்கத்தக்கது (மு.சண்முகம் பிள்ளை, நிகண்டுச் சொற்பொருட் கோவை, ப.உ௩௧௪). சேய், சேயோன், சேஎய், முருகன், கதிர்வேலன், முருகு, செவ்வேள், கடம்பன், குறிஞ்சிக்கிழவன், மால் மருகன், நெடுவேள் போன்ற அனைத்துப் பெயர்களும் சங்க காலத்தில் முருகனுக்கு வழங்கிய பெயர்களாகும். இப்பெயர்கள் அனைத்தும் முருகனின் தோற்றம், நிறம், சிறப்பு, இருக்கும் இடம் அடிப்படையில் சொல்லப்படுகின்றன.

## முருகன் தோன்றிய வரலாறு

முருகனுக்குச் சரவணன் என்ற பெயர் உண்டு. சரவணப் பொய்கையில் தோன்றியமையால் முருகனுக்கு இப்பெயர் ஏற்பட்டது. சிவன் தன் நெற்றிப்பொறியில் தோன்றிய ஆறு தீப்பொறிகளை வாயுபகவானிடம் கொடுத்தான். அந்த ஆறு தீப்பொறிகள் மூலம் ஆறு குழந்தைகள் தோன்றின. கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அக்குழந்தைகளை எடுத்து வளர்த்தனர். ஆறு குழந்தைகளை உமையம்மை எடுத்தணைத்தபோது ஆறு குழந்தைகளும் ஓர் உருவமாக மாறியது. ஆறு குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு குழந்தையாக மாறியதால் ஆறுமுகன் என்றழைப்பர். இதனை,

***ஆண்டுஆண்டு ஆயினும் ஆக, காண்தக***
***முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்தி,***
***கைதொழூஉப் பரவி, கால்உற வணங்கி***
***நடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை,***
***ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,***
***அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!***
***(திருமுருகாற்றுப்படை,பா. 250 - 255)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

## முருகு

முருகு என்றால் அழகு என்று பொருள் கூறுவர். ஆனால் சங்க இலக்கியம் முருகு என்பதற்கு முருகன், தெய்வம், வேள்வி, மணம், தேன், வெறியாட்டு என்ற பல்வேறு பொருள்களைத் தருகின்றது. இதில் அழகு என்று பொருள்படவில்லை. முருகக்கடவுளை அச்சுறுத்தும் தெய்வமாகவும் தீயதை விரட்டும் தெய்வமாகவும் சங்க மக்கள் கருதினர். முருகு என்ற சொல் வருமிடங்களில் வருத்தும் தெய்வமாகக் கருதப்படுகின்றது. தலைவி காதல் நோயால் வருத்தமுற அவள் பிணிக்கு "முருகு" காரணமாவான் என்று வேலன் உரைக்கின்றான். இதனை,

***கடியுடை வியல்நகர்க் காவல் கண்ணி***
***"முருகு" என வேலற் தரூஉம்***
***(அகநானூறு, பா. 232:13 – 14)***
***பொன் நகர் வரைப்பில் கன்னம் தூக்கி***
***"முருகு" என மொழியும் ஆயின்***
***(ஐங்குறுநூறு, பா. 247: 3 – 4)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இவ்வடிகளில் வேலன் அறியாது கூறினாலும் முருகன் சினத்தையுடைய, அச்சுறுத்தக்கூடிய தெய்வமாக விளங்கியதை அறிய முடிகின்றது.

## கடம்பன்

முருகனைக் கடம்பன் என்றும் கூறுவர். கடம்பு என்பது மரத்தையும் மலரையும் குறிக்கின்றது. முருகக் கடவுளுக்குரிய அடையாள மாலை கடம்ப மாலை ஆகும். இவன் கடம்ப மாலையைச் சூடுவதாலும் கடம்ப மரத்தில் உறைவதாலும் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும். கடம்ப மாலை செந்நிறமுடையதாகும்.

***கடம்பு அமர் செல்வன் கடி நகர் பேண***
***(பரிபாடல், பா.8:26)***
***கார் நறுங் கடம்பின் கண்ணி சூடி***
***(நற்றிணை, பா.34:9)***
***உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே***
***(பரிபாடல், பா.5:81)***
***கார்நறுங் கடம்பின்***
***(புறநானூறு, பா.23:3)***

என்ற அடிகள் வழி அறியலாம். இதில் உருள் இணர் என்பது தேரின் சக்கரம் போல் வட்ட வடிவமான பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை உணர்த்துகின்றது.

**ஆறுமுகன்**

ஆறுமுகன் என்பது முருகனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். ஆறுமுகங்களைக் கொண்டதால் இப்பெயர் பெற்றிருக்கக் கூடும். ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு செயல்களைச் செய்கின்றது. பேரிருளால் மறைக்கப்பட்ட உலகம் குற்றமற்று விளங்க பல கதிர்களைத் தோற்றுவித்து விளங்க செய்கிறது ஒருமுகம். இரண்டாவது முகம் அன்பால் வழிபடும் அடியவர்க்கு அவரவர் நிலைக்கு ஏற்றவாறு வரங்களைத் தருகின்றது. அந்தணர்கள் வேள்விக்கு இடையூறு நேராதவாறு காப்பது மூன்றாவது முகம். அதாவது அந்தணர்கள் கன்ம வேள்வி, தவ வேள்வி, செப வேள்வி, தியான வேள்வி, ஞான வேள்வி என்னும் ஐந்து வேள்விகளை இயற்றுவர். இவற்றை செய்யும்போது இடையூறு நேராதவாறு காப்பதாகும். நான்காவது முகம் மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட பொருள்களை உணர்த்தி ஒளிபெறச் செய்வது. ஐந்தாவது முகம் அசுரரை அழித்து களவேள்வி செய்யும் முகமாகும். ஆறாவது முகம் குறமகள் வள்ளியுடன் மகிழ்வுடன் நகை புரியும் முகம்.

**மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்**
**ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி**
**காதலின் உவந்வரம் கொடுத்தன்றே ..**
**ஆங்கு, அம்மூஇரு முகனும்**
**(திருமுருகாற்றுப்படை, பா. 91 - 103)**

என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

**முருகன் எழுந்தருளும் இடங்கள்**

இறைவன் கோயில்களில் மட்டும் தான் வீற்றிருப்பான், அங்கு மட்டும் தான் எழுந்தருளுவான் என்று நினைப்பது முற்றிலும் தவறானது. முருகனும் எல்லா இடங்களிலும் நிறைந்து காணப்படுபவன். பழங்காலத்தில் மக்களிடையே தெய்வம் பற்றிய நம்பிக்கை அதிகமாகவே காணப்பட்டது. மரங்கள், மலைகள், நீர்நிலைகள், பழுதடைந்த இடம், ஊர்மன்றம் இவற்றில் இறைவன் இருப்பதாக நம்பினர். குன்று இருக்கும் இடம் குமரன் இருக்கும் என்று கூறுவர். குன்றின் மீது மட்டுமின்றி காடு, சோலை, ஆற்றிடைக்குறை, ஆறு, குளம், நாற்சந்தி, முச்சந்தி, ஐஞ்சந்தி, புதிதாக மலர்ந்துள்ள கடம்ப மரம், ஊரம்பலங்கள், ஊர் நடுவே மக்கள் குழுமியிருக்கும் மன்றத்து மரம் என்று எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவன் முருகன் என்பதை,

**வேலன் தைஇய வெறிஅயர் களனும்,**
**காடும் காவும், கவின்பெறு துருத்தியும்,**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்,**
**சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்**
**(திருமுருகாற்றுப்படை, பா.அடி. 222 - 226)**

என்ற அடிகள் வழி அறியலாம்.

**முருகனுக்குரிய ஊர்தி**

தெய்வங்கள் ஒவ்வொன்றும் விலங்குகளையோ பறவைகளையோ தங்கள் ஊர்தியாகக் கொண்டு திகழ்வதாகக் கருதுவர். சங்க காலத்தில் முருகனுக்குரிய வாகனமாகக் களிறு கருதப்படுகிறது. இன்றைய காலத்தில் மயிலை முருகனுக்குரிய வாகனமாகக் கூறுவர். இந்திரன் செவ்வேளுக்குத் தன் மெய்யினின்றும் ஒரு கூற்றைப் பிரித்துப் புள்ளிகளையுடைய தோகை கொண்ட மயிலைக் கொடுத்தான் (பரிபாடல், பா. 5: 59 - 60) என்று குறிப்பிடுகின்றது.

**மலர் தூவி வழிபடுதல்**

மலர் தூவி வழிபடுவது எல்லா தெய்வத்திற்கும் பொதுவான ஒன்றாகக் கருதப்படுகின்றது. முருகனுக்கு செச்சை, வெட்சி மலர்கள் என்று தூவி வழிபாடு செய்தனர். இவை இரண்டும் சிவந்த நிறமுடையனவாகும். வெட்சியைத் தாவர நூலில் Ixoracoccinia என்றழைப்பர். செச்சை மலர், வெட்சியில் ஒரு வகையானது. சிவப்பு

உள்ள பூவாகும். இதன் பூவை ஆங்கிலத்தில் Ixoraroses என்றழைப்பர். வடமலையாளத்தில் இப்பொழுது வேலன் அமைத்த களத்திலும் திரையாட்டத்திலும், பிற சடங்குகளிலும் இந்தப் பூ, பரவலாகப் பூசைக்குரிய பூவாகப் பயன்படுத்தப்படுகின்றது. பிரசாதமாக இப்பூ வழங்கப்படுகின்றது. இந்தப் பூவை மலையாளத்தில் “செக்கி” என்று அழைப்பர் (பி.எல்.சாமி, சங்க நூல்களில் முருகன் ப.33 - 34). செச்சை என்பது சிவந்த நிற மலராகும்.

**கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்**
**(திருமுருகாற்றுப்படை,பா.அடி. 208)**

என்ற அடி வழி அறியலாம். காந்தள் மலர் வேலனுக்கு உகந்த மலராகும். இதனை,

**‘வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும்’**
**(தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.5)**
**குருதி ஒப்பின் கமழ் பூங்காந்தள்**
**(நற்றிணை, பா.399:2)**

என்ற அடி புலப்படுத்துகின்றது.

## ஐயவி பூசிக்கொள்ளுதல்

ஐயவி என்பது வெண்சிறுகடுகினைக் குறிக்கின்றது. வெண்சிறுகடுகினைத் தூவி வழிபட்டால் தீய சக்தி (பேய்) எதுவும் அண்டாது என்று மக்கள் நம்பினர். சங்க காலத்தில் போரில் புண்பட்டவர்களை வீட்டிற்குக் கொண்டு வந்து கவனிக்கும் போது அவர்களை பேய்கள் தீண்டாதவாறு வீடு முழுவதும் வெண்சிறுகடுகினால் நறும்புகைட்டினர் என்று இலக்கியம் குறிப்பிடுகின்றது. வெறியாட்டு நிகழும் இடத்திலும் ஐயவி பரப்பப்படும். ஏனெனில் வெறியாட்டு என்பது தலைவியை தீய சக்தி தீண்டியதற்காக நடைபெறக்கூடிய வழிபாடுகளில் ஒன்றாகக் கருதுவர். அதனால் அவ்விடத்தில் வெண்சிறுகடுகினைப் பரப்பி இருந்ததை,

**நெய்யொடு ஐயவி அப்பிஐது உரைத்து**
**குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி**
**முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇச்**
**செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி**
**மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடை**
**(திருமுருகாற்றுப்படை,பா. 228 - 232)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

## களம் அமைத்து வழிபடுதல்

வெறியாட்டு நடக்கும் இடத்தை வெறியாட்டுக்களம், வெறியயர்களன் என்று கூறுவர். களம் அமைத்து வழிபடும் முறையும் முருகனுக்கு உண்டு. களம் என்பது தெய்வத்தைச் சாந்தி செய்து பூசிப்பதற்குரிய இடத்தைக் களம் என்ற பெயராலே அழைப்பர் (பி.எல்.சாமி, சங்க நூல்களில் முருகன், ப.29) முருகன் பல்வேறு இடங்களில் இருப்பதாகக் கூறினாலும் வெறியாட்டு எடுக்கும்போது தனியாகக்களம் அமைக்கப்பட்டு வெறியயர்ந்ததைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது.

**வேலன் தைஇய வெறியயர் களனும்**
**(திருமுருகாற்றுப்படை, பா.அடி.222)**
**களன் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி**
**வளநகர் சிலம்பப் பாடி**
**(அகநானூறு,பா.22:8 - 9)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

## மலையில் பலியிட்டு வழிபடுதல்

தெய்வ வழிபாடு மேற்கொள்ளும் போது அத்தெய்வத்திற்கு உயிரினங்களின் பலி இடப்பட்டது. அவ்வுயிரினத்தின் இரத்தத்தைப் பலியாக இட்டால் நினைத்த காரியம் வெற்றியடையும் என்று மக்கள் நம்பினர். தான் செய்யும் செயல், தொழில், எண்ணம் நிறைவேறவில்லையென்றால் தெய்வக்குற்றமாகக் கருதும் பழக்கம் பண்டைக்காலம் தொட்டு இக்காலம் வரை மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுள் ஒன்றாகும். தனிமனிதனுக்கு ஏற்படும் இன்பமும், துன்பமும் நல்லவையும் கெட்டவையும் பொருள் இழப்பும் செல்வ வளமும், அவதூறும் செல்வாக்கும் அழிவும் வளமும் பாவமும் வீடுபேறும் இறைவனால் கொடுக்கப்படுபவையே என்ற மக்களின் நம்பிக்கை சமயம் போதிப்பதாகும் என்கிறார்

பக்தவச்சலபாரதி ('சங்கம்' புதினத்தில் கொல்லிவாழ் மக்களின் வாழ்வியல், ப.89) குறிஞ்சி நிலத்திற்குரிய தொழில்களுள் வேட்டையாடுதல் ஒன்றாகும். வேட்டைக்குச் சென்ற கானவன் அங்கிருந்த ஆமான் மீது அம்பு எய்தான். அவ்அம்பு குறி தவறி வீழ்ந்தது. தன்னுடைய வேட்டைத் தொழிலில் குறி தவறியதால் தெய்வக் குற்றமாகக் கருதினான். மலையில் உறைந்திருக்கும் கடவுளின் கோபம்தான் காரணம் என்று நினைத்தான். கடவுளின் கோபம் தணிய வேண்டுமென்றால் இம்மலையில் மழை பெய்ய வேண்டும். மழை பெய்தால் கடவுளின் கோபம் தணியும் என்று நம்பினான். மலைத் தெய்வத்தை வழிபடும் பொருட்டு தன் சுற்றத்தோடு சேர்ந்து வந்து அம்மலைக்குப் பலியிட்டு வணங்கினான். இதனை,

***மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்,***
***மாரி யான்று மழை மேக்குயர் கெனக்***
***கடவுட் பேணிய குறவர் மாக்கள்***
***(புறநானூறு,பா.143:1 – 3)***

என்ற அடிகள் வலியுறுத்துகின்றன. இங்கு மலைத்தெய்வம் என்பது முருகனைக் குறிக்கின்றது. வெறியாடலில் பலியிடும் பழக்கம் இருந்துள்ளது.

## வழிபாட்டில் செந்நிறம்

சிவந்த நிறம் முருகனுக்கு ஏற்ற நிறமாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் முருகன் மேனியின் நிறம், ஆடை, மலர்கள் என்று அவன் அணிந்திருக்கும் எல்லா பொருள்களும் சிவந்த நிறமுடையனவாகும். முருகன் செந்நிறமான ஆடை அணிந்திருந்தை,

***பவளத்தன்ன மேனித் திகழொளிக்***
***குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்***
***(குறுந்தொகை, பா. கடவுள்வாழ்த்து, 2 – 3)***

***செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரை***
***(திருமுருகாற்றுப்படை, பா.அடி.205 – 217)***

என்ற அடிகள் விளக்குகின்றன. இன்றைய காலத்திலும் செவ்வாய்க்கிழமை முருகனுக்குரிய நாள் என்றும் அந்நாளில் சிவப்பு நிற ஆடை அணிகின்றனர் மக்கள். அதுமட்டுமின்றி சிவப்பு வளமையின் அடையாளமாகும்.

விழாக்காலங்களில் மக்கள் கைகளில் கட்டிக்கொள்ளும் ஒன்றைக் காப்பு என்று கூறுவர். இது நூல் மற்றும் துணியில் மஞ்சள் கிழங்கை சேர்த்துக்கட்டுவது வழக்கமாகும். சங்க காலத்தில் மக்கள் முருகனை வேண்டி கட்டப்பட்ட காப்பு சிவந்த நூலால் கட்டப்பட்டு இருந்தது. இதனை வேலன் மட்டுமே கட்டிருந்தான். முருகனை ஆற்றுப்படுத்தும் வெறியயர் களத்தில் வேலன் செந்நூல் யாத்து அணிந்திருந்தான். யாத்து என்பது காப்பைக் குறிக்கின்றது. இதனைத் திருமுருகாற்றுப்படை

***முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇ***
***செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி***
***(திருமுருகாற்றுப்படை,பா.231 – 232)***

என்ற அடிகள் வழி அறியலாம்.

## மந்திரம் ஓதி வழிபடுதல்

கோயில்களில் வழிபடுதல் போலவே வெறியயர் களத்திலும் வழிபாடு நடைபெறுகின்றது. வெறியாட்டுக் களத்தில் வேலன் மந்திரம் ஓதி வழிபாடு நடத்துகின்றான். இதனைத் திருமுருகாற்றுப்படை "ஐதுரைத்து குடந்தம்பட்டு' என்று குறிப்பிடுகின்றது. குடந்தம்பட்டு என்பது வழிபடுதல் என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அதாவது நான்கு விரலை மடக்கிக்கொண்டு பெருவிரலை மார்பிடையே வைத்து வணங்குவதாகும். இதனை,

***. ஐதுரைத்து,***
***குடந்தம் பட்டு, கொழுமலர் சிதறி***
***(திருமுருகாற்றுப்படை, பா. 228 – 229)***

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. முருகனுக்குரிய மந்திரம் ஆறெழுத்து மந்திரமாகும். இந்த ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து வழிபடுவதை திருமுகாற்றுப்படை கூறுகின்றது. ஆறெழுத்து மந்திரம் என்பது "சரவணபவ" என்பதாகும்

***உச்சிக் கூப்பிய கையினர் தற் புகழ்ந்து***
***ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி***
***நாவியல் மருங்கின் நவிலப் பாடி வரைஉறு***
***நறுமலர்ஏந்திப் பெரிது உவந்து***
***ஏரகத்து உறைதலும் உரியன்***
***(திருமுருகாற்றுப்படை, பா. 185 - 189)***

என்ற அடிகள் வழி அறியலாம்.

**கூத்துக்கள்**

வெறியாடல், குன்றக்குரவை, துணங்கைக் கூத்து போன்ற கூத்துக்களும் முருகன் பொருட்டு நடைபெறும் கூத்தாகும். குரவையில் பல்வேறு வகைகள் உண்டு. அவை குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை என்பதாகும். இவற்றில் குன்றக்குரவைக் கூத்து என்பது முருகன் நிமித்தமாக ஆடப்படும் கூத்தாகும். மங்கையர் எழுவர் கைகோர்த்து ஆடும் கூத்தாகும். இக்கூத்து பொழுதுப் போக்கு, வழிபாடு சமயங்களிலும் நடைபெறக் கூடியதாகும்.

**குறிப்பார்த்தல்**

குறிப்பார்ப்பது என்பது வெறியாட்டு முன்பு நிகழ்க்கூடியதாகும். இதனைக் கட்டுவிச்சி, வேலன் இருவரும் பார்ப்பது பழக்கமாகும். கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்

***ஒட்டிய திறத்தால் செய்திக்கண்ணும்***

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். கட்டுவிச்சி நெல்லை வைத்து பார்க்கப்படும் முறை கட்டுமுறையாகும். அதாவது முறத்தில் (சுளகு) நெல்லை வைத்து தெய்வங்களைப் பாடிக்கொண்டு எண்ணிப்பார்த்துக் கட்டு விச்சி காணும் முறை. இதனைக் "கட்டுக் காணுதல்' என்று கூறுவர். கழங்கை வைத்து பார்க்கப்படும் குறி வேலனுக்குறியதாகும்.

***நல் நுதல் பரந்த பசலை கண்டு, அன்னை***
***செம்முது பெண்டிரோடு நெல் முன் நிறீஇ***
***கட்டின் கேட்கும் ஆயின்***
***(நற்றிணைபா.288:5 - 7)***
***பெய்ம்மணல் முற்றம் கவின்பெற இயற்றி***
***மலைவான் கொண்ட சினைஇய வேலன்***
***கழங்கினான் அறிகுவது என்றால்***
***(ஐங்குறுநூறு, பா.248: 1 - 3)***
***பொய் படுபு அறியாக் கழங்கே***
***(ஐங்குறுநூறு பா.250:1)***

என்ற அடிகளின் வழி தலைவியை வருத்தியவன் முருகு எனக் கூறியது கழங்கு ஆகும். ஆதலால் பொய்த்தல் அறியாத கழங்கு எனக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

**வெறியாட்டு எடுத்தல்**

வெறியாட்டு எடுத்தல் என்பது பேயோட்டுவது ஆகும். தலைவன், தலைவி களவொழுக்கம் மேற்கொள்வர். களவொழுக்கத்தில் பகற்குறி, இரவுக்குறி நடைபெறும். தினை அறுவடைக்குப் பின் தலைவனைக் காணாமல் தலைவி உடல் மெலிவுற்று வருத்தமுற்று இருப்பாள். இதனைக் கண்ட செவிலி, நற்றாய் ஆகிய இருவரும் தலைவி தினைப்புனம் காக்க சென்ற இடத் தில் தெய்வம் ஏதேனும் வருத்திவிட்டதோ என்று எண்ணி வெறியாடல் நடத்த முடிவு செய்வர். அந்தத் தெய்வம் முருகு என்று நம்பினர். முருகு என்பது முருகனைக் குறிக்கின்றது.

***அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்***
***(நற்றிணை பா.282:5)***
***அறியா வேலன் தாகஇ அன்னை வெறியயர்***
***வியன்களம் களம் பொலிய ஏத்தி***
***(அகநானூறுபா.242:10 - 11)***
***வெறியென உணர்ந்த வேலன் நோய்***
***மருந்து அறியான் ஆகுதல் அன்னை காணியர்***
***(குறுந்தொகை பா.360:1 - 2)***

என்ற அடிகள் விளக்குகின்றன. தீய சக்திகளை விரட்டும் தன்மை முருகனுக்கு உண்டு என்று சங்க இலக்கியம் பகர்கின்றது. வெறியாட்டு எடுப்பது முருகனைப் பூசிக்கும் வேலன் ஆவான். முருக வழிபாடு வேலன் வெறியாட்டுடன் தொடர்புடையதாக மட்டுமே பழந்தமிழர்களிடையே இருந்துள்ளது (முருகன் தொன்மம் - நெறிநின்றார் நீடு வாழ்வார் - சமயமும் சமயநெறியும் ப.68) இது குறி பார்த்தப்பின்பு நடைபெறும் நிகழ்வாகும். வெறியாட்டின் போது வேலன் வேல் கொண்டு வருவது மரபாகும். இதனை

***நெடுவேல் ஏந்திய நீ எமக்கீயா அர்***
***தொடுதல் ஓம்பென அரற்றலும் அரற்றும்***

***கடவுள் வேங்கையும் காந்தளும் மலைந்த***
***தொடலைக் கண்ணி பாணீயலம் என்னும்***
***(தொல்காப்பியம் பொருளாதிகாரம். நூ.எண்:115)***

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தெய்வம் ஏறப்பட்ட இவன் வேல் கொண்டு ஆடுவதால் வேலன் எனப்பட்டான். வெறியாட்டுக்களத்தில் வெண்மணல் கொண்டு பரப்பி வெண்சிறு கடுகு பரப்பி மலர்கள் தூவி வழிபாடு நடைபெறும்.

வெறியாட்டின்போது வேலன் முன் தலைவியை நிறுத்தி அவள் கூந்தல் பூவை எடுத்து வீசுமாறு செய்கின்றனர். இதனைப் பராக்கடன் என்று கூறுவர். ஏனெனில் பூச்சூடி எறிவதால் தீயது விலகும் என்று மக்கள் நம்பினர். இதனை,

***மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தென***
***பின்னு விடு முச்சி அளிப்பு ஆனாதே***
***(நற்றிணை பா.51:6 – 7)***

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. இன்றைய காலத்திலும் பேயோட்டும் போது பூக்களை கூடி வீசி எறிவதை ஒருசில இடங்களில் காண முடிகின்றது.

### கார்த்திகைவிழா

முருகனுக்கு கார்த்திகேயன் என்ற பெயர் உண்டு. கார்த்திகை மாதம் கார்த்திகை பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்டதால் இப்பெயர் உண்டாயிற்று. சங்க இலக்கியத்தில் கார்த்திகை திருவிழா பற்றிய குறிப்பு உள்ளது. இது முருகனுக்கு நடைபெறும் விழாவாகும். கார்த்திகை மாதம் முருகனுக்கு உகந்த மாதமாகும். கார்த்திகை மாதத்தில் மதி நிறைந்த நன்னாளில் (பௌர்ணமி) விளக்கேற்றி வழிபடுவது பண்டைக்காலம் தொட்டு இன்று வரை நடைமுறை வழக்கில் உள்ளது. வீடுகளில் மட்டுமின்றி மலையில் இருக்கும் கோயில்களிலும் தீபம் ஏற்றுவது பழக்கமாகும். தீபத்தை தொடர்ந்து மூன்று நாட்கள் ஏற்றுவர். கார்த்திகை தீப விழாவிற்கு இலவம் பூக்கள் மலர்ந்திருப்பதை சங்கப் புலவர்கள் உவமையாகக் கூறுவர். இலவம் பூ தீப்போன்ற நிறத்தை ஒத்து இருப்பதால் இவற்றை உவமையாகக் கூறுகின்றனர். இதனை,

***அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்,***
***பெருவிழா விளக்கம் போல, பலஉடன்***
***இலைஇல மலர்ந்த இலவமொடு***
***நிலைஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே***
***(அகநானூறுபா.185:10 – 13)***

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

### பங்குனி உத்தர விழா

பங்குனி உத்தரவிழா முருகனுக்கு எடுக்கப்பட்ட விழாவாகும். அரங்கம் என்பது ஆற்றிடைக்குறையைக் குறிக்கின்றது. ஆற்றிடைக்குறையில் முருகன் நிறைந்திருக்கக் கூடியவன். அவ்ஆற்றிடைக்குறையில் சங்க காலத்தில் பங்குனி உத்தர விழா நடைபெற்றது. இதனை "பங்குனி முயக்கம்" என்றும் கூறுவர். பங்குனி உத்தர விழா என்பது பங்குனித் திங்களில் (மாதத்தில்) உத்தரமும் நிறைமதியும் கூடிய (பௌர்ணமி) நன்னாளில் கொண்டாடும் விழாவாகும். மக்கள் அனைவரும் இந்த நன்னாளில் ஆற்றிடைக்குறையில் ஒன்று கூடி விடியும் வரை விழாக்கோலம் பூணுவர். அங்கு உணவு சமைத்து உண்டு களித்து இன்பம் கொள்வர் என்பதை,

***உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்***
***பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்,***
***வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்***
***தீஇல் அடுப்பின் அரங்கம் போல***
***(அகநானூறுபா.137:8 –10)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. மேலும் பங்குனி உத்தரம் கொண்டாடிய மறுநாள் அவ்விடம்அழகிழந்துகாணப்பட்டதுஎன்று கூறுவதன் மூலம் அது ஆற்றிடைக்குறையில் கொண்டாடப்பட்டது என்பது தெரிய வருகின்றது. இக்காலத்திலும்பங்குனிமாதத்தில் முருகனுக்கு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

### முடிவுரை

முருகன் பழம்பெரும்கடவுளாகவும் எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவனாகவும்

குறிஞ்சி நிலத்திற்கு முதன்மை கடவுளாகவும் கருதப்படுவதை அறியமுடிகிறது. பங்குனி உத்தரவிழா, கார்த்திகை தீபவிழா போன்ற விழாக்கள் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகவும் அவை வழிவழியாக நடைமுறையில் உள்ளதையும் அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. சு.அழகேசன்(ப.ஆ.), தொல்காப்பியம், சுதா பதிப்பகம், தூத்துக்குடி, முதற்பதிப்பு, 2008
2. ஆலிஸ், அ. (உ.ஆ). பதிற்றுப்பத்து. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
3. சண்முகம்பிள்ளை, மு. நிகண்டு சொற்பொருட் கோவை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு, 1982
4. சாமி, பி.எல்., சங்க நூல்களில் முருகன், சேகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு
5. சுப்பிரமணியன்,பெ.(உ.ஆ).பரிபாடல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
6. செயபால், இரா. (உ.ஆ). அகநானூறு (தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
7. செயபால், இரா. (உ.ஆ). அகநானூறு (தொகுதி - 2). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
8. தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ). ஐங்குறுநூறு (தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
9. நாகராஜன், வி. (உ.ஆ). குறுந்தொகை (தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
10. நாகராஜன், வி. (உ.ஆ). குறுந்தொகை (தொகுதி - 2). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
11. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ.ஆ). நற்றிணை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
12. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ.ஆ). புறநானூறு (தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
13. மணிவாசகம், க., முருகன் தொன்மம் - நெறிநின்றார் நீடு வாழ்வார் - சமயமும் சமயநெறியும், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 2, 2021.
14. மோகன், இரா. (உ.ஆ). பத்துப்பாட்டு பகுதி 1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
15. மோகன், இரா. (உ.ஆ). பத்துப்பாட்டு பகுதி 2. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
16. விசுவநாதன், அ. (உ.ஆ). கலித்தொகை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.
17. ராமு, க., "சங்கம்" புதினத்தில் கொல்லிவாழ் மக்களின் வாழ்வியல், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 6, இதழ் 1, 2021.